## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.10 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஆனந்தகுமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து ஹிட்டாச்சி வாகன ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். இறந்துபோன மில்டன் ராஜை தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரியின் மனைவிக்கும், மில்டன் ராஜிக்கும் தகாத உறவு இருந்ததால் ஆஜர் எதிரி அவரை கொலை செய்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். வெள்ளாளங்கோட்டை கோவில் திருவிழாவிற்கு நாங்கள் சென்றுவிட்டு வந்தோம். ஒருவாரம் கழித்து மில்டன் ராஜின் பிரேதம் திருமங்கலகுறிச்சி அடுத்த தோப்பில் இருப்பதாக தகவல் கிடைத்தது. ஊரில் அனைவரும் அங்கு சென்றோம். பிரேதம் அழுகி, புழு வைத்து கை, கால்களில் துளையுடன் இருந்தது. பிரேதத்தின் அருகில் ஒரு கைபேசி இருந்தது. வேறு என்ன இருந்தது என்று ஞாபகமில்லை. செபஸ்தியார் கோவில் திருவிழா வழக்கமாக ஜனவரி 25 ல் நடக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எந்த தேதியில் வெள்ளாளங்கோட்டை திருவிழாவிற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு சுமார் 7 மணிக்கு சென்றோம். தேதி ஞாபகமில்லை. நானும், என் குடும்பத்தாரும் சென்றோம். எங்கள்

குடும்பத்தார் நான்கு பேர் போனோம். வெள்ளாளங்கோட்டை திருவிழா முடிந்து அன்று இரவே ஒரு மணி இரண்டு மணி அளவில் வந்துவிட்டோம். எதிரியின் மனைவிக்கும், மேற்படி மில்டன் ராஜிக்கும் தகாத உறவு இருந்ததாக யார் எனக்கு சொன்னார்கள் என்றால் ஊரில் எல்லாரும் பேசிக் கொண்டார்கள். முதன் முதலாக அதுகுறித்து என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எந்த தேதியில் அவ்வாறு பேசிக் கொண்டார்கள் என்றால் தெரியாது. மதியம் 2 மணியளவில் பிரேதம் இருந்த தோட்டத்திற்கு சென்று பார்த்தேன். பிரேதம் அங்கு இருப்பதாக முதன் முதலில் அ.சா.3 என்னிடம் சொன்னார். பகல் சுமார் 1.30 மணியளவில் தகவல் சொன்னார். தகவல் கிடைத்தபோது நான் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் வேலை பார்த்துக் கெண்டிருந்த தோட்டத்திற்கும், பிரேதம் இருந்த தோட்டத்திற்கும் இடையில் சுமார் 3, 4 கி.மீ. துாரம் இருக்கும். பிரேதம் இருந்த தோட்டத்திற்கு நான் போகும்போது அங்கு ஏராளமான ஆட்கள் இருந்தார்கள். நான், அ.சா.3, அ.சா.1, இறந்துபோனவரின் மனைவி, என் தங்கையின் கணவர் மது ஆகியோரும் இருந்தார்கள். நான் சுமார் 30 நிமிடங்கள் அங்கிருந்தேன். நான் அங்கு போகும்போது போலீசார் அங்கிருந்தார்கள். போலீசார் என்னை அப்போது விசாரிக்கவில்லை. மேற்படி தகாத உறவு குறித்து மில்டன்ராஜ் இறந்த பிறகு எனக்கு தெரியவந்ததா என்றால் அதற்கு முன்பே ஊரில் பொதுவாக பேசிக் கொண்டார்கள். பிரேதத்தை நான் பார்த்த பிறகு ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆனால் சரியாக சொல்லமுடியாது. ஆஜர் எதிரியின் மனைவிக்கும், மில்டன் ராஜிக்கும் தகாத உறவு இருந்ததாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வெள்ளாளங்கோட்டை திருவிழாவிற்கு

சென்றுவிட்டு வந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. பிரேதத்தை மாலை சுமார் 4 மணியளவில் எடுத்துச் சென்றதாக சொன்னார்கள். நான் அதற்கு முன்பாகவே அங்கிருந்து வந்துவிட்டேன். மில்டன் ராஜ் பிரேதம் இருப்பதாக யார் மூலம் எனக்கு தகவல் வந்தது என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. பிரேதம் இருந்த தோட்டத்திற்குள் செல்வதற்குள் வாசல் வழியாகத்தான் சென்று வரமுடியும் என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் மனைவிக்கும், மில்டன் ராஜிக்கும் தகாத உறவு இருப்பதாக போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.02 17:25:19 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.11 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மதுசிங்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து ஜெசிபி ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். சுமார் 2020ம் ஆண்டு வாக்கில் மாலை வேளையில் போலீசார் மில்டன் ராஜ் இறந்துகிடந்த இடத்தில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தும், சம்பவ இடத்தில் இருந்த ஒரு செருப்பு, மண் மற்றும் ஒரு கைபேசி ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றும்போதும் மேற்படி பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும், மிகாவேலும் உடனிருந்து கையொப்பமிட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 2.** அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 3**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

மேற்படி ஆவணங்களில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் மேற்படி வரைபடத்தை பார்க்கவில்லை. வரைபடத்தில் தோட்டத்தின் கம்பி வேலி ஏதாவது ஒரு பகுதியில் உடைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் மேற்படி தோட்டத்திற்கு போகும்போது மில்டன்ராஜ் இறந்துகிடந்தார். கைபேசி கிடந்தது. செருப்பு கிடந்தது. செருப்பு தோட்டத்தில் எந்த

பகுதியில் கிடந்தது என்றால் ஞாபகமில்லை. தோட்டத்திற்கு எந்த பகுதியில் கைபேசி இருந்தது என்றால் ஞாபகமில்லை. தோட்டத்தில் காணப்பட்ட கைபேசி என்ன நிறம் என்றும், எந்த நிறுவனத்தை சார்ந்தது என்றும் ஞாபகமில்லை. நான் சொன்ன நேரத்திலும, சொன்ன விதத்திலும் மேற்படி தோட்டத்திற்கு போகவில்லை என்றும், போலீசாரும் அங்கு வரவில்லை என்றும், போலீசார் நிலையத்தில் தயாரித்த ஆவணங்களில் நான் நிலையத்தில் கையொப்பமிட்டுவிட்டு பிரேதம் இருந்த இடத்தில் கையொப்பமிட்டதாக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் முன்பாக போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.02 17:25:30 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.

Prosecution witness for P.W.12 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. செல்வராஜ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கழுகுமலை – கயத்தார் சாலையில் சூரியமினுக்கன் என்ற கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2021ம் ஆண்டு ஒரு நாள் இரவு சுமார் 11 மணியளவில் போலீசார் கயத்தார் – கழுகுமலை சாலையில் குரியமினுக்கன் கிராமத்தில் சாலையின் ஓரமாக கொஞ்சம் தள்ளி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்து அந்த பார்வை மகஜரில் நானும், மாடசாமி என்பவரும் உடனிருந்து அதில் கையொப்பமிட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 4.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

போலீஸ் விசாரணையிலும் முதல்விசாரணை சங்கதிகளைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.ஆ 4 ல் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. மேற்படி ஆவணம் எப்போது, எங்கு எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் எந்த விபரமும் தெரியாமல் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பமிட்டேன் என்றால் வரைபடம் தயாரித்து கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். வரைபடத்தில் தோட்டத்தின் கம்பி வேலி ஏதாவது ஒரு பகுதியில்

உடைக்கப்பட்டதாக போலீசார் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் நான் சரியாக பார்க்கவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.02 17:25:38 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.